செ.வெ.எண்.88 நாள்.14.02.2018.

# பத்திரிக்கை செய்தி –கல்விக்கடன் முகாம்

2016 – 2017 ஆம் கல்வி ஆண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று முடித்த மாணவ / மாணவியர்கள் உயர்கல்வியினை தொடர்ந்த நிலையில் கல்விக்கடன் பெறுவதற்கு வங்கியில் விண்ணப்பித்து தொகை பெறப்படாத மாணவர்களுக்காக சிறப்பு கல்வி கடன் முகாம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் **17.02.2018 காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி**யில் நடைபெறுகிறது.

இம்முகாமில் அனைத்து வங்கி மேலாளர்கள் கல்லூரி கல்வி இணை இயக்குநர், மாவட்ட கல்வி அலுவலர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பயின்று வரும் கல்லூரி மாணவர் / மாணவியர்கள் கல்வி கடன் பற்றிய முழுமையான விபரங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.